விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 15 வியாழக்கிழமை (29.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 100

கோ RAMCO CEMENT
MADRAS CEMENTS LTD
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# எந்த நேரத்திலும் பேச்சை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கிறது!

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் எந்த நேரத்திலும் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கணிசமான தகைமைகளுடன் கூடிய சமாதான உடன்படிக்கையைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கடத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் காணாமல் போனோர் தொடர்பாக கண்டறியும் குழு ஏற்பாடு செய்திருந்தது.

கடத்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

காணாமல் போனோர் தொடர்பாக பொலிஸாரின் அறிக்கை என்ன? அவர்கள் தொடர்பான தகவல்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவச் செயற்பாட்டின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்

## ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதம ஆலோசகரும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ளவருமான டயான் ஜெயதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

விடுதலைப்புலிகளின் விமானப் படை கொழும்பில் தாக்குதல் நடத்தியதை மேற்குலக நாடுகள் வித்தியாசமாகப் பார்க்கின்றன. இதன்மூலம் அவர்களது பலம் நிரூபிக்கப்பட்டிருப்பது போன்றும் பேச்சு மேசையில் பிரச்சினை அணுகப்பட வேண்டுமென்றும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

அத்தகைய கருத்துக்களை நான் நிராகரிக்கின்றேன். இலங்கை என்ற ஒரு நாட்டிற்குள் இருதரப்பினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருக்க வாய்ப்பில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் ஒருபகுதியும் அரசின் கட்டுப்பாட்டில் மற்றொரு பகுதியும் ஒரு நாட்டிற்குள் சமாதானமாக இணைந்து செயற்பட வாய்ப்பில்லை என்பதையே இந்த வான் தாக்குதல் புலப்படுத்துகிறது.

எனவே இராணுவத் தீர்வு மூலம் இந்த நிலையை அணுக வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இதற்குத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவை விசாரிக்க புலனாய்வுப் பிரிவு முடிவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவை விசாரணைக்குட்படுத்துவதற்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முடிவு செய்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சீமெந்து நிறுவனம் ஒன்றின் பணியாளர்களான நிக்கிலஸ் கொழும்புட், முகமெட் மகரூப் ஆகியோர் சமர்ப்பித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே விசாரிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

மாத்தறை நிதியம் எனப்படும் மங்கள சமரவீராவால் இயக்கப்பட்டு வந்த அமைப்புக்கு இவர்களால் 60 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததாக இவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ச)

## தமிழகக் கரையோரப் பாதுகாப்பை அதிகரிக்க இராணுவத்திற்கு உத்தரவு

(புதுடில்லி)

தமிழக கடலோரத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு இந்திய பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் இராமேஸ்வரத்தையடுத்த அரிச்சல்முனைக் கடற்கரையிலிருந்து சுமார் 18 கடல் மைல் தொலைவில் இலங்கையின் தலைமன்னார் கரையுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டு வரும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இந்தியக் கடல் எல்லையில் கூடிய கண்காணிப்பில் ஈடுபடுமாறு இந்திய இராணுவத்தினருக்கு இந்திய மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரிச்சல்முனை முகாமில் இந்திய கடற்படையினரின் 12 கட்டளைத் தளபதிகள் முகாம் இட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு 5 அதிநவீன போர்ப் படகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் போர்க்கப்பல்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய அதிநவீன ஆயுதங்களும் இரவு நேர தொலை (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா கூடுதல் கவனம் செலுத்துகிறது

### இந்திய வெளியுறவுச் செயலாளர் அறிவிப்பு

(டில்லி)

இலங்கையில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்துக் கூடிய கவனம் செலுத்தி வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் பிரச்சினைக்கு இலங்கையே தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு இந்தியா உதவுமென இந்திய வெளிவிவகாரச் செயலர் சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து கவனம் செலுத்தி வருவதாகவும் இந்த அதிகரிப்புக்கான உதாரணம் அண்மையில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட விமானத் தாக்குதல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வழங்கிய இந்துரா ராடரில் விடுதலைப்புலிகளின் விமானங்கள் தென்படவில்லை என்பதைத் தாம் நிராகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சம்பவத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிரடிட் காட் மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் கைது

கிரடிட் காட் மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவரைச் சென்னைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சுமார் 25 சர்வதேச கிரடிட் காட்டுக்கள் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சஞ்சீவ்காந் (வயது-31) என்பவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர் என தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் இலண்டனில் இருந்து பெறப்பட்ட கிரடிட் காட்டுகள் மூலம் சென்னையில் ஏரிம் நிலையங்களில் பணத்தைப் பெற்று விலையுயர்ந்த நகைகளைக் கொள்வனவு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

# கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் தம்வசம் என்கின்றது இராணுவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் நேற்று முன்தினம் மாலையுடன் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் பிரதேச தலைமை அலுவலகமும் தற்போது தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அப்பிரதேசத்தில் விடுதலைப்புலிகளினால் விட்டுச் செல்லப்பட்ட கிளைமோர்க் குண்டுகள் உட்பட பல ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொடுவாமடுவுக்குள் இராணுவத்தினர் ஊடுருவ எடுத்த முயற்சியை முறியடித்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.


செங்கலடிப்பாலம் இராணுவ முகாமில் இருந்து நேற்று புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இம் முன் நகர்வினை இராணுவத்தினரும் துணை இராணுவக் குழுவினரும் மேற்கொண்டனர்.

முன் நகர்வை (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007
ICC Cricket World Cup

## மத்யூ ஹைடனின் அதிரடியில் அவுஸ்திரேலியாவிடம் சொந்த மண்ணில் வீழ்ந்தது மேற்கிந்தியத்தீவுகள் அணி



அவுஸ்திரேலிய அணியிடம் 103 ஓட்டங்களால் சொந்த மண்ணில் வீழ்ந்தது மேற்கிந்திய தீவுகள் அணி. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொடரின் சூப்பர் 8 ஆட்டத்தின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் அன்ரிக்டுவாவில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின்தலைவர் பிரைன் லாரா முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மத்யூ ஹைடனின் அதிரடி ஆட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மத்யூ ஹைடன் 158 (14 – 4 ஓட்டம் 4 –6 ஓட்டம் உட்பட) ஓட்டங்களையும், கிளார்க் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக பவல், பிரவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாட, இடை இடையே மழை குழப்பம் செய்ததனையடுத்து அவுஸ்திரேலிய அணியின் இனிங்ஸ் நிறைவடைய மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாட மழை விடாது போக போட்டி நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று 50 ஓவர்களில் 323 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பாட்டத்தை ஆரம்பிக்க மெக்ராத் , ஹொகின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 103 ஓட்டங்களால் சொந்த மண்ணில் தோல்வியடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் பிரைன் லாரா 77 ஓட்டங்களையும் ராம் டீன் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக இளைன் மெக்ராத் ,பிரேட் ஹொக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ரைட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக 143 பந்துகளில் 158 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலிய அணியை வெற்றிக்கு வழி சமைத்த மதீயூ ஹைடன் தெரிவானார்.

இவ் வெற்றியுடன் அவுஸ்திரேலிய அணி சூப்பர் 8 ஆட்டத்தில் லீக் போட்டியில் போனஸ் 2 புள்ளிகளுடன் மொத்தம் 4 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றது. (ச-5)






## சுயதொழில் புரிவோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் புரியும் தொழிலாளர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் ஒன்றினை வழங்கும் திட்டம் சமூக பாதுகாப்பு சபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத் திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கும் 6 ஆயிரம் ரூபா மாத வருமானத்திற்கு கீழ் உள்ளவர்களுக்கும் 6 ஆயிரம் ரூபா மாத வருமானத்திற்கு மேல் உள்ளவர்களுக்கும் தனித்தனியாக சகன , திலின,இசுறு ஆகிய மூன்று ஓய்வூதியத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளி 18–59 வயதுக்கு இடைப்பட்டவராக இருப்பதோடு அரச உத்தியோகஸ்தர் அல்லாதவராகவும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கு உரித்தற்றவராகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறான நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள சுய தொழிலாளர் பிரதேச செயலகத்தின் சமூகசேவை உத்தியோகஸ்தர் மூலம் அல்லது மாவட்ட செயலகத்தில் மாவட்ட இணைப்பதிகாரி மூலம் இவ் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து மாதம் 500 ரூபா முதல் 8 ஆயிரம் ரூபா வரையான மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


### யாழ்ப்பாணம்-மாநகரசபை
### நீர்க்கட்டண அறவீடு மாற்றம் பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 2007.04.01-ம் திகதி தொடக்கம் 1-5 வரையான அலகுகளிற்கான நீர்க்கட்டணம் பின்வருமாறு மாற்றப்பட்டு அறவிடப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

| இல. | வர்க்கம் | ஓர் அலகு (1000 லீற்.) | மாற்றப்பட்டுள்ள நீர்க்கட்டணம் |
|---|---|---|---|
| 01. | அ.வீட்டுப்பாவனை | 01-05 | ரூபா 200/ |
| | ஆ.மத ஸ்தாபனம் | 01-05 | ரூபா 200/ |
| 02. | போதனா வைத்தியசாலை | 01-05 | ரூபா 300/ |
| 03. | அரச நிறுவனங்கள் | 01-05 | ரூபா 300/ |

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
27.03.2007.
(C-666)


## மணவாளக் கோல உற்சவம்
(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மணவாளக் கோல உற்சவம் நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார்.

அன்றைய தினம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ச-3)

## இலங்கையில் இடம் பெறும் வன்முறைகள் கவலை தருகிறது என்கிறார் ஐ.நா.செயலாளர்

இலங்கையில் தொடர்ந்து உக்கிரமடைந்து வரும் வன்முறைகள் தன்னை மிகவும் கவலையடைய வைத்திருப்பதாக ஐக்கிய நாடுகள்சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகச் செல்லும் அளவுக்கு உக்கிர மடைந்துள்ள வான் மற்றும் பீரங்கித்தாக்கு தல்கள், இராணுவ முன்னகர்வுகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் அந் நாட்டில் நாளாந்த நடவடிக்கைகளாக மாறிவருவது தனக்கு மிகுந்த கவலையளிப் பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ள தாக அவரது பேச்சாளர் தெரிவித்தார்.

தாக்குதல்களும் பதில் தாக்குதல்களும் மேலதிக அழிவுகளுக் கும் இரத்த ஆறு ஓடும் மோசமான நிலைமைக்குமே வழிவகுக்கும். இரு தசாப்த காலப் போரில் மக்கள் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளனர். அர சாங்கமும் விடுதலைப்புலி களும் உடனடியாக அனைத்து வன்முறைகளையும் தாக்குதல்களையும் முற்றாக நிறுத்தி முன்நிபந்தனை எதுவுமில்லாமல் பேச்சு மேசைக்கு திரும்ப வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


### உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள சொந்தப் பாவனையில் உள்ள 226-XXXX இலக்கமுடைய வெள்ளை நிற மிற்சுபிசி தயாரிப்பிலான 13 1/2 அடி அலுமினிய உடைய 4560 CC கன்டர் ரக டெலிவறி வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 021-2263594 (846)


## தேசிய டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு
(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியை 2006ல் நிறைவு செய்த ஆசிரியர்களை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ச)

## விளையாட்டு வீரர்களை பதியக் கோரிக்கை
(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான சைக்கிள் மரதன் மற்றும் வேகநடைப் போட்டிகளை எதிர்வரும் சித்திரை மாதம் 28,29 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் நடாத்துவதற்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் அந்தந்த பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்களுடன் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட பதில் விளையாட்டு அதிகாரி சி.துரைசிங்கம் அறிவித்துள்ளார். (ச)

## குருபூசை நிகழ்வு
(யாழ்ப்பாணம்)

யோக சுவாமிகளின் குருபூசை தினம் இன்று காலை 9 மணிக்கு சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## அலங்கார உற்சவம்
(பொன்னாலை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி பிற்பகல் 3.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம் பெறும். 7 ஆம் திகதி சப்பறமும் 8 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ச-49)

## தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு
(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான இம் மாதக் கொடுப்பனவும் இச் செயலமர்வின் போது வழங்கப்படவுள்ளது.

அனைத்து ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ச)

## கொமிசியக் கூட்டம்
(ஊர்காவற்றுறை)

புனித-மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-72)

## சனி,ஞாயிறு தினங்களில் கடைகள் திறந்திருக்கும்
(யாழ்ப்பாணம்)

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் 01.02.2007 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 14.04.2007 சனிக்கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்கள் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அவ் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் 14.04.2007க்குப் பின் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் சனி அரை நாள், ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் கட்டாயமாக கடைகளைப் பூட்டி ஒத்துழைக்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச)


### ரகு போட்டோ டெக்னிக் இடமாற்றம்

மிகச் சிறந்த முறையில் முகக் கண்ணாடி ஒட்டுமிடம். கோல்ட் கலர் ஒட்டிய பின்னும் அதே கலர். சில்வர் என்றால் அதே சில்வர். கறுப்பு நிறம் என்றால் அதே கறுப்பு நிறம். மாற்றமில்லாமல் உடனு வேலை செய்து வந்த மேற்படி ஸ்தாபனம் தற்பொழுது முன்பிருந்த அதே கஸ்தூரியார் வீதியில் 187/6, சில்லா ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் இயங்கி வருகின்றது. நாவலர் றோட் சந்திக்கு 20 யார் தூரத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. சு.நாராயண சுவாமி. (781)

தவற்றை சரிப்படுத்திக் கொள்ள பிரயாசைப்படுவதால் அவமானம் கிடையாது.

-ராஜாஜி

வலம்புரி

## சந்தர்ப்பவாத சமாதானம் வேண்டவே வேண்டாம்

கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் விமானப்படை நடாத்திய தாக்குதல் இலங்கையின் அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வான் தாக்குதலினால் எத்தனை யுத்த விமானங்கள் அழிக்கப்பட்டன என்ற விபரங்கள் துல்லியமாக வெளியிடப்படாமல் விட்டாலும் அதனைப் பற்றி யாரேனும் சாட்டை கொள்வதாக தெரியவில்லை.

மாறாக விடுதலைப்புலிகளின் விமானங்கள் நாட்டின் கேந்திர மையமான கட்டுநாயக்கா விமானத்தளத்தில் தாக்குதல் நடத்தி விட்டன என்பதே இப்போது பெரிய கதையாகவுள்ளது.

விடுதலைப்புலிகள் நடத்திய விமானத்தாக்குதலுக்கு அப்பால் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்களை அறியவேண்டிய தேவையில்லை என்ற அளவில் விமானத் தாக்குதல் பெரும் வியாபகம் பெற்றுவிட்டது.

தரைப்படைத் தாக்குதல், கடற்புலிகளின் தாக்குதல், தற்கொலைப்படைத் தாக்குதல் என்ற தாக்குதல் வகைகளுக்கு இலங்கை அரசும் சிங்கள மக்களும் இசைவாக்கமடைந்திருப்பதால் அத்தகைய தாக்குதல்களின்போது ஏற்படுகின்ற இழப்புக்களை மறைப்பது அதி பெரும் கஷ்டமாக இருக்கவில்லை.

கூடவே இனவாத ஊடகங்களின் தாராளமான பங்களிப்பு இருந்தமையால் தாக்குதல்களால் ஏற்பட்ட இழப்பு கடலில் மிதக்கும் பனிக்கட்டிபோல் பெரும்பகுதி அமிழ்ந்து போயிற்று.

அதேவேளை விடுதலைப்புலிகள் பலமிழந்து வருவதாகவும் அவர்களில் குறிப்பிட்ட அளவினரே இப்போது தாக்குதலில் ஈடுபட்டு இருப்பதாகவும் சிங்கள மக்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டன.

இத்தகவல்கள் வழங்கலில் அரசிற்கும் இனவாத ஊடகங்களுக்கும் தாராளமான பங்களிப்புண்டு. கூடவே யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியும் என்ற பரப்புரைகளுக்கும் பஞ்சமில்லை.

இவ்விதம் அரசும் ஊடகங்களும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டதன் மூலம் சிங்கள மக்கள் உண்மையை அறியமுடியாமல் போயிற்று.

இந்நிலையில் கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் சிங்கள மக்கள் மத்தியில் தாங்கிக் கொள்ளமுடியாத அதிர்ச்சியை விளைவித்து விட்டது.

விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்றால் விமானத் தாக்குதல் நடத்தியது எவ்வாறு? என்ற கேள்வி எழுவது நியாயமானதே. இத்தகையதோர் வினவலில் விடுதலைப்புலிகளின் யுத்த விமானங்களே கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியது என்ற உண்மையை அரசும் இனவாத ஊடகங்களும் ஏற்றுக்கொண்டு அதனைப் பொது மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளன.

அவ்வகையில் உண்மைகள் நீண்டகாலம் மறைக்கப்படக்கூடியவை அல்ல என்பதை எல்லோரும் இப்போது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

குறிப்பாக யுத்தத்தின் மூலம் விடுதலைப்புலிகளை வெல்ல வேண்டும். உலக நாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற கொள்கையுடையவர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறுவார்கள் என நம்பலாம்.

இந்த மாற்றங்கள் காலத்தின் தேவையானவை என்ற கருத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் என அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கவிடயமாகும்.

எனினும் அரசின் இந்த அறிவிப்பு சந்தர்ப்பவாதமாக இருக்க கூடாது என்பதே அனைவரது பிரார்த்தனையாகும். அதாவது, விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலால் தென் பகுதி மக்களிடையே ஏற்பட்ட அதிர்ச்சியைப் போக்குவதற்கும் எதிர்க்கட்சிகளின் கோஷங்களைத்தடுப்பதற்குமான அறிவிப்பாக 'சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசு தயார்' என்ற வாசகமும் இருக்கலாகாது. மாறாக சந்தர்ப்பம் கருதிய அறிவிப்பாயின் அதனால் ஏற்படுவது பேரழிவே.

## சர்வதேசத்தின் ஆதரவுடன் பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்கு நாம் தீர்வுகண்டோம்

### இலங்கையிலும் ஏற்படுத்த முடியும் என்கிறார் அஸர்பைஜான் தூதுவர்

(கொழும்பு)

இலங்கை போன்று புரையோடிப்போன பயங்கரவாதப் பிரச்சினை எமது நாட்டிலும் இருந்தது. சர்வதேசத்தின் துணையுடன் அதனை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொண்டோம். அது குறித்த அனுபவங்களை இலங்கையுடன் நாம் பரிமாறவுள்ளோம் என அஸர்பைஜான் நாட்டின் புதிய தூதுவர் கலாநிதி தமெர்லான் கராயோவ் தெரிவித்தார்.

இலங்கையுடன் முதல் தடவையாக இராஜதந்திர உறவை ஏற்படுத்தியுள்ள அஸர்பைஜான் இலங்கைக்கான புதிய தூதுவர் ஒருவரையும் நியமித்துள்ளது. இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தூதுவர் மேலும் கூறியதாவது, ஒரு நாட்டில் யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பது இலகுவானது. அதனை முடிவுக்குக் கொண்டுவருவது மிகவும் சிரமமானது. இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் விடயத்தில் எமக்கு சிறந்த அனுபவம் உண்டு. இதனை இலங்கைக்கும் எங்களால் வழங்கமுடியும்.

இனிவரும் காலங்களில் இலங்கைக்கும் அஸர்பைஜானிற்கும் இடையில் உறவை மேம்படுத்துவோம். அதே சமயம் பொருளாதார வர்த்தகத்துறையை வளம்படுத்த நடவடிக்கையெடுப்போம். பொருளாதார, வர்த்தக மற்றும் கல்வி போன்ற துறைகளிலும் இரு நாடுகளுக்கிடையில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அஸர்பைஜான் ஒரு ஜனநாயக மக்கள் குடியரசாகும். இங்குள்ள இயற்கைச் சூழல் உல்லாசப் பிரயாணிகளை மிகவும் கவர்ந்துள்ளது. நாம் இலங்கை மக்களை மிகவும் நேசிக்கிறோம். அவர்களை எங்கள் நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம் எனவும் தூதுவர் தெரிவித்தார். (ச-5)

## தேசிய நலனுக்காக முன்னுரிமை வழங்குங்கள் ஊடகங்களிடம் ஜனாதிபதி கோரிக்கை!

(கொழும்பு)

தேசிய நலனுக்கே ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார். இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் தலைவர்களை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது; ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. எவ்வகையான தொழில்களில் ஈடுபட்டாலும் நாம் வாழ்வதற்கு ஒரு நாடு அவசியம். அதனால் நாம் எப்போதும் எமது நாட்டிற்கே முன்னுரிமை வழங்கவேண்டும்.

எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளின் விமானத்தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடிக்கக்கூடிய உறுதி மிக்க திட்டங்களை படையினர் வகுத்துள்ளனர். சந்தேகத்திற்கிடமான விமானங்கள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து தகவல் பெற்றுக்கொள்வதற்காக 116 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீதான தாக்குதல் தொடர்பாக சில வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்ட தவறான செய்திகள் காரணமாக அரசாங்கம் சில அசௌகரியங்களை எதிர்கொண்டது. எனினும் தொழில் நுட்ப உதவிகளை வழங்க சில நாடுகள் இத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கைக்கு உறுதியளித்துள்ளன.

தனிப்பட்ட வகையில் என்னையோ அல்லது எமது அமைச்சர்களையோ விமர்சிக்கும் உரிமை ஊடகங்களுக்கு உண்டு. இதற்கு எவ்வித கட்டுப்பாடுகளையும் அரசு விதிக்கவில்லை. ஆனால், எமது படையினருக்கு மன விரக்தி ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடவேண்டாம் என சகல ஊடகங்களையும் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் இது எதிரிகளை பலமடையச்செய்துவிடும்.

எமது விமானப்படைத் தளத்திற்கு ஏற்படவிருந்த பேரழிவு ஒன்றை எமது விமானப்படையினர் உரிய முறையில் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்துள்ளனர். அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். எமது படையினரின் பதில் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் விடுதலைப்புலிகளின் இரண்டாவது விமானம் தனது இலக்குகளைத் தாக்க முடியாமல் தப்பியோடியுள்ளது.

முன்னைய அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியராட்சி ஆகியோருக்கும் எனக்குமிடையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. ஆனால் தேசிய பாதுகாப்பை மலினப்படுத்த எவருக்கும் உரிமை இல்லை. தேசிய பாதுகாப்புத் தொடர்பான அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பிழையானவை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்கள் மீண்டும் அரசாங்கத்தில் இணைந்துகொள்வதில் பிரச்சினையில்லை என்றார் ஜனாதிபதி. (எ-1)

## விமானத் தாக்குதலை பயன்படுத்தி அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி

### சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலை பயன்படுத்தி சில கட்சிகள் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்தை முறியடிக்க எப்போதும் இல்லாதவாறு தற்போது மக்களின் அர்ப்பணிப்பு அவசியம். தாக்குதல்களை நடாத்துவதற்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்யும் தேவையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் பயங்கரவாதத்தை முறியடிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் ஒருபோதும் வலுவிழக்கவில்லையென தெரிவித்துள்ள அவர், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மேலதிகமாக பிரபாகரன்கள் சில் நாட்டில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்தப் பிரபாகரன்களுக்கு பதிலளிக்க அர்சாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ச-3)

## சிவயோக சுவாமிகளின் நாற்பத்துமூன்றாவது குருபூசை

இன்று யோகசுவாமிகளது 43ஆவது குருபூஜை நாள். யோக சுவாமிகள் தீர்க்கமான குரு. அவரை அண்டி வாழ்ந்து அவரது உண்மை சொரூபத்தைக் காணும் பாக்கியம் பெற்ற கண்ணுடைய வள்ளல்கள் சிவபெருமான் அருண்மேனி தாங்கிய அழகிய ஆடல் காட்டுவதாகவே துணிந்தனர். அவர் ஓர் உத்தம குரு என்பதற்கு அவரால் ஆளாக்கப்பட்ட மூன்று துறவுச் சீடர்கள் தக்க சான்றாவர்.

அவர்களில் ஒருவர் *மார்க்கண்டு சுவாமி*. அவர் ஒன்றிலும் சேராத ஹடோமுத்தராய் கைதடி ஆச்சிரமத்தில் வட திசை காட்டும் கருவி போன்று பிரமசொரூபம் ஒன்றையே பார்த்திருந்தார். இன்னொருவர் ஆங்கிலேயரான சந்தசாமி. அவர் சில ஆண்டுகள் செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலிருந்து சிவதொண்டாற்றிப் பின் மார்க்கண்டு சுவாமிகள் போன்ற ஹடோமுத்தராய் பரிணமித்தார். மற்றையவர் *செல்லத்துரை சுவாமிகள்*. அவர் சந்ததம் மோன நிலை தவறாது இருந்துகொண்டே இரு சிவதொண்டன் நிலையங்களிலும் அரையாண்டுக்கு மேலாக சுறுசுறுப்புடன் பணி செய்தார்.

இம் மூவருடன் இன்னும் பல ஆடவரும் மகளிருமான இல்லறச் சீடர்களும் தனது ஞானத் தந்தையார் தகவுக்கு தக்க சான்றாயுள்ளனர். *தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்* என்றோர் தமிழ்மறை உண்டல்லவா! இத்துடன் ஞான நூற்பயிற்சியுடையவர்கள் யோகசுவாமிகளது திருவாய் மொழிகளைப் பேணி வைத்திருக்கும் *நற்சிந்தனை , எங்கள் ஆசான் அருள்மொழிகள்* என்னும் இரு நூல்களிலும் ஈடுபட்டு இவ்வாறான 'வேதமொழி'கள் பூரண ஞானியரது மொழிகளே எனத்துணிந்து கொள்வர். மேலும் அவர் நிறுவிய சிவதொண்டன் நிலைய குறிக்கோள் நடைமுறை என்பவற்றை அவதானித்தோரும் இத் தன்னை அறியும் தவச்சாலையை நிறுவிய பெரியோர் தனை உணரறிவை போதிக்கவல்ல தன்னை அறிந்த ஞானியே என்ற உறுதியை பூணுவர்.

இத்தகைய பூரண ஞானியைப் பெற்ற நாம் பாக்கியவான்களே. ஆதலால் இவ்வாறான குருபூசை நாள் நமக்கு அவர் உரைத்த ஞான மொழிகளில் ஒன்றை மனதால் சிந்தித்து தெளிய முயலுதல் அவருக்குச் செய்யும் சிறந்த பூசனையாக அமையும்.

அவர் '*ஆதாரமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இழந்துபோவதும் ஒன்றுமில்லை*' என அடிக்கடி கூறினார். ஆங்கிலம் அறிந்தவர்களிடம் Nothing is lost. Nothings Gaind எனக் கூறினார். ஞானியர் தானம், தர்மம், தவம் செய்யுங்கள் எனக் கூறுவது வழக்கம். யோக சுவாமிகள் அவற்றுடன் இப்படியான ஒரு வசனத்தையும் கூறியதற்கு ஒரு காரணம் உண்டு. அக் காரணம் என்னவெனில் நம்மவர் எல்லாவற்றிலும் நயம் பார்ப்பவர்களாக இருந்ததே அதற்கான காரணம்.

ஆன்மபலத்தை பார்ப்பவர்களாக இருந்திருந்தால் அது மிக நன்றே. ஆனால் நம்மவரது இலாபம் உலகியலான அற்பலாபமானதாகவே இருந்தது. ஆன்ம சுகத்தை இழந்து விட்டதாக அழுது துடிப்பவர்களாக இருந்திருப்பின் அது மிக்க நலமானதே. ஆனால் நாலு காசை இழப்பதற்காகவே நம்மவர் நொந்து துடித்தனர். நம்மவர் கல்வியில் பெரியராகப் பெயர் பெற்றிருந்தது மெய்மையே. ஆயின் இக் கல்வி வயிறை நிரப்பும் உத்தியோகத்திற்கான கல்வியாகவே சீரழிந்து கொண்டிருந்தது.

சேர். பொன். இராமநாதன் சகோதரர்களும் சைவப்பெரியார் திருவிளங்கம் போன்றோர்களும் ஆங்கில மொழியில் உயர் கல்வி பெற்றிருந்தனர். ஆயின் தாயுமான சுவாமி பாடல்கள் ஆகியவற்றை ஆங்கில மொழி பெயர்க்குமளவு சிவஞான சித்தியார் ஆகிய நூல்களுக்கு சிறந்த உரை எழுதும் அளவு சமயம், சரித்திர மொழிப்புலமையும் ஞானமும் அவர்களிடம் இருந்தன. அவையே அந்தஸ்து மிக்க அவர்கள் சுவாமிகளின் முன்னிலையில் கிடுகிடென நடுக்கத்துடன் பணிந்து நிற்கும் பெருமையையும் முற்காலத்தில் அரசர்கள் எடுத்தது போல் ஆலயங்களை நிறுவும் அறப்பணிகள் செய்யும் தொண்டு உறுதியையும் அளித்தன. இவையே நமது பண்பாடும் செல்வமும் பெருமையுறுவதற்கும் அடிப்படையாக அமைந்தன.

நாம் இத்தகைய அடிப்படையில் நின்று புரண்டு பொருளாதார லாபத்தையே கருத்தாய்க்கொண்டு சீரழிந்து போய்க்கொண்டிருந்தோம். இதுவே இப்போதைய நமது இழிவுக்கு முதலாவதான காரணம். இவ்வாறான இழிவு நமக்கு நேராதிருத்தற்பொருட்டே சுவாமிகள் இலாப நட்டக் கதையை திரும்பத்திரும்பக்கூறினார். நாம் இதனைக் கேளாது இந்நிலைக்கு ஆளாகிவிட்டோம். சுவாமிகள் நன்மையும் தீமையும் நாம் தரவருவன. அவை பிறர் தருவனவல்ல எனக் கூறுவர். ஆதலால் பிறரை நோவாது ஆன்ம லாபத்தை பொருளெனக்கொள்ளாது நாலு பணம் சம்பாதிப் பதையே லாபமாகக் கொண்டு வாழ்ந்த நமது பிழைக் கிரங்கி சுவாமிகளை பணிந்து பூசித்து அருளாதாரத்தையே நம்பி வாழ்வோமாக.

'*பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி ஆறுமுகன் தஞ்சமடி*' என்ற அவர் திருவாக்கை நம்பி எல்லாவற்றையும் நடாத்தும் அந்த ஒன்றையே தஞ்சமென நம்பி இந்த நெருப்பாற்றை கடப்போமாக.

**பொ.இராசரத்தினம்**
தலைவர்
சிவதொண்டன் சபை.

# இந்தியத் தயாரிப்பான ராடரில் புலிகள் விமானம் பதிவாகவில்லை

## அரசாங்கம் குற்றஞ்சாட்டு

இலங்கைக்கு இந்திய அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட ராடர்களால் விடுதலைப்புலிகளின் விமானங்களை அவதானிக்க முடியவில்லை என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று வெளியான ஆங்கில ஊடகமான த ஐலெண்ட் நாளிதழ் இதனைத் தெரிவித்துள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமை வரை விமானங்கள் வந்ததை இந்தியாவால் வழங்கப்பட்டிருந்த ராடர்களால் அவதானிக்க முடியவில்லை.

இலங்கையின் விமானப்படையில் இணைக்கப்பட்டிருக்கும் இந்திய ராடர்களானவை இயங்குவதில் சிக்கல் உள்ளன. தாக்குதல் நேரத்தின் போது அது இயங்கவில்லை. அதேநேரத்தில் சர்வதேச பயணிகள் விமான நிலையத்திலுள்ள ராடரானது ஊடுருவியோரை அவதானித்துள்ளது. அது மிகவும் தாமதமானது. ஏனெனில் அந்தத் தளத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் ஊடுருவல்காரர்கள் இருந்தனர்.

இந்திய ராடர் இயங்காமல் போன விடயம் குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் கவனத்திற்கு அரசாங்கம் கடந்த திங்கட்கிழமை கொண்டு சென்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் சீனாவிலிருந்து 3டி உயர் ரக ராடர்களை கொள்வனவு செய்ய விரும்பினார்.

ஆனால் அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் இவ்விடயத்தில் தலையிட்டு கொழும்பின் பாதுகாப்புக்கான ராடர்களை வழங்குவோம் எனத் தெரிவித்தார் எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)



யாழ்.இந்து மதகுருமார்களுக்கும் யாழ். இராணுவத் தளபதிக்குமிடையில் பலாலியில் நேற்று சந்திப்பொன்று இடம் பெற்றது. அதனைப் படத்தில் காணலாம்.

# விமானங்கள் பற்றிய தகவல் கிடைத்ததும் நடவடிக்கை எடுக்காமைக்கு விசாரணை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் இரண்டு விமானங்கள் வவுனியாவின் ஊடாக வருவதாகப் பொலிஸாரும் இராணுவத்தினரும் விமானப் படையினருக்கு அறிவித்த போதிலும் விமானப் படையினர் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து பொலிஸ் இரகசியப் பிரிவினர் முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த விமானங்கள் இரண்டும் வவுனியா கணேசபுர கிராமத்திற்கு மேலாகச் சென்றதைக் கண்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் இது தொடர்பாக விமானப் படையினருக்கு அறிவித்தனர்.

விமானப் படையினருக்கு இந்த விடுதலைப்புலிகளின் விமானங்கள் குறித்துஅறிவித்த போதிலும் உரிய செயற்பாடுகளை எடுக்காமை குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிஸார் பாதுகாப்பு மீற்றும் பொலிஸ் பிரதானிகள் பலரிடமும் தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என லங்கா தீப செய்தி வெளியிட்டுள்ளது. (ச–5)

# பஞ்சாங்கம் வெளியீடு

எதிர்வரும் சர்வஜித் தமிழ்ப் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பஞ்சாங்கம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இப் பஞ்சாங்கத்தில் புதுவருடப்பிறப்புடன் தொடர்பான சுப நேரங்கள், சுப கருமங்கள், புதுவருடப் பலன், மாத ரீதியான சுப நேர விபரங்கள், இந்துக்களின் விரதங்கள், இலங்கையிலுள்ள பிரதான ஆலயங்களில் வருடாந்த விழாக்கள் போன்ற விபரங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இப் பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார். (எ)

# சென்னையில் இருந்து பாரீஸ் சென்ற இலங்கையர் இருவர் கைது

(கொழும்பு)

சென்னையில் விமான நிலையத்திலிருந்து ஏயார் பிரான்ஸ் மூலம் கடந்த வாரம் சென்ற இரு பயணிகளும் இலங்கையர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் வேறு நாட்டுக் கடவுச் சீட்டுக்களுடன் தமது பயணச் சீட்டைப் பெற்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

அத்துடன் விமான நிலையத்திலிருந்து வேறு விமானம் மாறும் போது இவர்கள் தமது உண்மையான ஆவணங்களை மற்றும் கடவுச் சீட்டுக்களைக் கிழித்தெறிந்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சு)

# பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்து கோத்தபாயவை நீக்க வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தும்வரை பாதுகாப்பு அமைச்சு என்ன செய்து கொண்டிருந்தது. எனவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உடனடியாக பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும். அவர் இந்த விடயத்தில் என்ன செய்யப் போகின்றார் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிகெல்ல தெரிவித்தார். கொழும்பு எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றசெய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். (ச–5)

## கொக்கட்டிச்...

எதிர்த்து விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர். இதன்போது ரி–56 ரகத்துப்பாக்கிகள்–08 உட்பட பல ஆயுதத் தளபாடங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் இரு உடல்களும் மீட்கப்பட்டுள்ளதென புலிகள் தெரிவித்துள்ளனர். (ச–1.3)

## தமிழகக்...

நோக்குக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் இந்தியக் கடற்படையினர் 24 மணிநேரமும் இந்தியக் கடல் எல்லையைக் கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட சென்னை , விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து போர்க் கப்பல்கள் மண்டபம் பகுதியிலுள்ள இந்தியக்கடற்படை முகாமுக்குச்சென்றுள்ளன.

இதுதவிர தமிழகத்தின் கரையோரப் பகுதிகளான இராமேஸ்வரம், உச்சிப்புளி, அரிச்சல்முனை, முகுந்தராஜசத்திரம் ஆகிய பகுதிகளில்இந்தியப் போர் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் தாழ்வாகப்பறந்து கண்காணிப்புப்பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் இலங்கையிலிருந்து சந்தேகத்திற்கிடமான படகுகளை வானில் இருந்தபடியே கண்காணிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச–3)

## இலங்கை இனப்பிரச்சினை...

தைக் குறித்துப் பேசாமல் பிரச்சினைக்கு என்ன தீர்வை வழங்கலாம் என்பது குறித்தே சிந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் காரணமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் இந்தியா கவலையடைந்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தனக்குத்தானே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா ஊக்கமளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். ஏப்ரல் 3,4 ஆம் திகதிகளில் புதுடில்லியில்நடைபெறவுள்ள சார்க் எனப்படும் தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் 14–வது உச்சி மாநாட்டில் பயங்கவாதப் பிரச்சினையை எழுப்பத் திட்டமிட்டிருப்பதாக இலங்கை தெரிவித்திருப்பதாகவும் மேனன் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிக்க சார்க் நாடுகள் எவ்வாறு ஒன்றுபட்டு செயற்படுவது என்பது குறித்து மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றார் மேனன். (ச–3)

## ஆட்கடத்தலுக்கு...

என்ன? இவர்கள் எங் கே உள்ளார்கள்? என காணாமல் போனோர் தொடர்பாகக் கண்டறியும் குழுவின் உப தேசகர் விக்கிரமபாகு கருணாரத்தின கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தெரியாது எனக் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்று அவர் மேலும் கூறினார். இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கடத்தல்கள், காணாமல் போதல் தொடர்பில் அரசு உடனடியாகப் பதில் வழங்க வேண்டுமென இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் நாளுக்கு நாள் ஆட்கடத்தல்கள் அதிகரித்துச் செல்வதாகக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறினார். (எ–3)

## எந்த நேரத்திலும் பேச்சை...

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது. விரைவில் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க கணிசமான தகைமைகளுடன் கூடிய சமாதான உடன்படிக்கையை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

பேச்சுக்களைத் தொடர வேண்டும் என்பதையே அரசாங்கம் விரும்புகின்றது. பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அனைத்து வாய்ப்புக்களையும்அரசாங்கம்ஆராய்ந்து வருகின்றது. விடுதலைப்புலிகள் இணங்கினால் நாளை கூட பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

இது தொடர்பாக இணைத் தலைமைகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

பேசுவதற்கு அவசியமான அனைத்துச் சாத்தியப்பாடுகளையும் ஆராய்வது அவசியம் என அரசு நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முதல் விமானத் தாக்குதல் மற்றும் இராணுவ முகாமுக்கு வெளியே ஒரு தற்கொலைப் படைத் தாக்குதல் உட்பட இரண்டு நாள் திடீர் தாக்குதலையடுத்து விடுதலைப்புலிகளுடன் எந்த நேரத்திலும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தயார் என இலங்கை அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–3,5)

## இராணுவச் செயற்பாட்டின்...

தீர்வு காண எத்தனிக்கக் கூடாது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் வான்தாக்குதல் நடைபெற்ற பின் ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அமைச்சர், ஜனாதிபதி யின் ஆலோசகர் ஆகிய நால்வரும் நான்கு விதமான முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பது அரசின் உறுதியற்ற கொள்கை வெளிபாட்டையே புலப்படுத்துகின்றது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ–5)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
2008 A/L
CHEMISTRY
PHYSICAL
BY:-Mr. N.மகேஸ்வரன்
ஆரம்பம் :- 30.03.2007
காலை 6.15 MON & FRI
(783)

NEW SCIENCE HALL
JAFFNA
2007 BATCH இலத்திரனியல்
வெள்ளி - 2.30 P.M ஆரம்பம் - 30.03.2007
2008/2009 BATCH ஒளியியல்
திங்கள், புதன் - 4-5 P.M ஆரம்பம் -02.04.2007
By R.KUGAN
(c-667)

புலமைப் பரீட்சை வினாத்தாள்
❖ தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளின் கணிதம் + நுண்ணறிவு வினாக்களை மட்டும்உள்ளடக்கி கொழும்பு பிரபல ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள் மாதம் இரு முறை வெளிவர உள்ளது.
❖ பெற விரும்பும் பெற்றோர், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் முற்பதிவு செய்வது அவசியம்.
❖ முதல் வெளியீடு ஏப்ரல் முதல் வாரத்தில்.
❖ விலை ரூபா பத்து மட்டுமே.
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.077 6510149 (784)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
நீண்ட கால இடைவெளியின் பின் 23.03.2007ஆம் திகதியிலிருந்து
அல்டி மேட்ஸ்ரார் அஜித் (மூன்று வேடங்களில்)
அசின்,
ரமேஷ்கண்ணா
நடித்த

வரலாறு
தினசரி:- 10.30,2.00

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.